31.01.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழக கடலோர பகுதிகளில் மழை பெய்யக் கூடும்: வானிலை அறிவிப்பு

குமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையின் காரணமாக தமிழக கடலோர பகுதிகளில் ஆங்காங்கே சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இலங்கை ஒட்டிய குமரிக் கடல் பகுதியில் வியாழக்கிழமை யன்று குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. இது சற்று மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவுகளுக்கு அருகில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக தமிழகத்தின் கடலோர பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்யும். தமிழகத்தின் பிற இடங்களில் வறண்ட வானிலையே நிலவும். சென்னையை பொருத்தவரையில் வானம் மேகமூட்டமாக இருக்கும். காலை வேளையில் மூடுபனி நிலவும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

### கடலோரப் பகுதிகளில் இன்று மழை வாய்ப்பு

கன்னியாகுமரிக் கடல் பகுதியில் நிலை கொண்டுள்ள குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை காரணமாக, தமிழக கடலோரப் பகுதிகளில் ஆங்காங்கே சனிக்கிழமை மழை பெய்ய வாய்ப்புள்ளது என்று வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது. இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: இலங்கையை ஒட்டிய குமரிக் கடல் பகுதியில் வியாழக்கிழமை குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவானது. இது சற்று மேற்கு நோக்கி நகர்ந்து லட்சத்தீவுகளுக்கு அருகில் நிலை கொண்டுள்ளது. இதன் காரணமாக, தமிழகத்தின் கடலோர பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்யும். தமிழகத்தின் பிற இடங்களில் வறண்ட வானிலையே நிலவும். சென்னையைப் பொருத்தவரையில் வானம்

மேகமூட்டமாக இருக்கும். காலை வேளையில் மூடுபனி நிலவும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

**<u>கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம்</u>**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக் கலை ஆராய்ச்சி மையம் தொடங்க வேண்டும் என குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிரமணியன் தலைமையில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இக்கூட்டத்தில் பேசிய விவசாயிகள் செண்டு மல்லி நாற்றுக்கு மானியம் வழங்க வேண்டும். செம்மை நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு களை எடுக்கும் நவீன இயந்திரமான கோனோவீடர் கருவி வழங்க வேண்டும். ராயக்கோட்டையில் கால்நடை மருத்துவமனை தொடங்க வேண்டும். மானிய விலையில் மருந்து தெளிப்பான் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர். விவசாயி துரை ராமச்சந்திரன், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மா விவசாயிகள் பயனடையும் வகையில் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் தொடங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். தோட்டக் கலைத் துறையின் சார்பில் சொட்டு நீர்ப் பாசனத்துக்கான கருவிகள் வழங்க வேண்டும். தனியார் விதை விற்பனை நிலையங்களில் போலி விதைகள் விற்பனை செய்வதைத் தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ராமகவுண்டர் வலியுறுத்தினார். வறட்சியால் காய்ந்துபோன கரும்புக்கு இழப்பீடு வழங்க வேண்டும். டன் கரும்புக்கு விலை குறைக்கப்பட்டதை ரத்து செய்ய வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர். இதற்கு பதில் அளித்த மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிரமணியன், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தோட்டக்கலை ஆராய்ச்சி மையம் தொடங்க மாவட்ட நிர்வாகம் சார்பில் அரசுக்குப் பரிந்துரை செய்யப்படும். சொட்டு நீர்ப் பாசனக் கருவிகள் வரும் பிப்ரவரி மாத இறுதிக்குள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படும்.

காப்பீடு செய்த கரும்புக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## <u>சிறுதானிய விவசாயிகளுக்கு தொழில்நுட்பப் பயிற்சி</u>

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே சிறுகுறு விவசாயிகளுக்கு அறுவடைக்கு முன், பின் தொழில்நுட்பப் பயிற்சி முகாம் வியாழக்கிழமை நடைபெற்றது. அன்னவாசல் அருகே கீழக்குறிச்சியில் செயல்படும் ஜீ.வி.என் அறக்கட்டளையும், நபார்டு வங்கியும் இணைந்து நடத்திய இந்த பயிற்சி முகாமை புதுக்கோட்டை மாவட்ட நபார்டு வங்கி வளர்ச்சி மேலாளர் எஸ். சோமசுந்தரம் தொடக்கி வைத்துப் பேசியது: தற்போது சிறுதானிய உற்பத்தி மூன்றில் ஒரு பங்காக இருக்கிறது. விவசாயிகள் தங்களது நிலத்தில் சுழற்சி முறையில் விவசாயம் செய்ய வேண்டும். மேலும் இத்திட்டத்தின் மூலம் 2 ஆண்டுகளில் 100 விவசாயிகளை 100 ஏக்கர் நிலத்தில் சிறுதானியத்தை உற்பத்தி செய்ய வைக்கப்படும். முதல் ஆண்டில் அன்னவாசல், குன்றாண்டார்கோவில் ஒன்றியத்தில் 50 விவசாயிகளுக்கு 50 ஏக்கர் நிலத்தில் சிறுதானிய உற்பத்தி செய்ய விதை, இடுபொருட்கள் மற்றும் பயிற்சி ஆகியவை அளிக்கப்படும் என்றார். அறக்கட்டளை நிர்வாக இயக்குநர் என். சுப்பிரமணியன், பாரதிதாசன் பல்கலைக்கழக பேராசிரியர் லலிதா, வம்பன் வேளாண் அறிவியல் நிலைய மனையியல் உதவிப் பேராசிரியர் மு. கீதா,வேளாண் அலுவலர் முகமதுரபி ஆகியோர் பேசினர். இதில் 50 விவசாயிகள் கலந்துகொண்டு பயிற்சி பெற்றனர்.

## <u>வாழை தோட்டங்களில் விஞ்ஞானிகள் ஆய்வு</u>

பெரம்பலூர் மாவட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள வாழை தோட்டங்களில் விஞ்ஞானிகள் அண்மையில் ஆய்வு மேற்கொண்டனர். பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள குரும்பலூர், அன்னமங்கலம், தொண்டமாந்துறை, மலையாளப்பட்டி, செங்குணம், லாடபுரம் ஆகிய பகுதிகளில் பூவன், கற்பூரவள்ளி, மொந்தன், ரஸ்தாளி, ரொபஸ்டா, கிராண்ட் நையின் ஆகிய

வாழை வகைகள் பயிரிடப்பட்டு வருகின்றன. கடந்த சில நாள்களாக வாழை இலைகள் புழுக்களால் உண்ணப்பட்டும், இலைகளின் ஓரங்கள் ஆங்காங்கே சுருண்டு தென்பட்டதை அறிந்த விவசாயிகள் திருச்சியில் உள்ள தேசிய வாழை ஆராய்ச்சி மையத்துக்கு தகவல் தெரிவித்தனர். இதையடுத்து, தேசிய வாழை ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி முனைவர் பால. பத்மநாபன், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மைய முதுநிலை ஆராய்ச்சியாளர் சரவணன் ஆகியோர் செங்குணம் பகுதி வாழை தோட்டங்களில் ஆய்வு மேற்கொண்டனர். இதில் ரஸ்தாளி, பூவன், மொந்தன், மோரிஸ் ஆகிய வாழை ரகங்களில் இலை சுருட்டுப் புழுவின் தாக்குதல் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. பின்னர், தேசிய வாழை ஆராய்ச்சி மைய முதன்மை விஞ்ஞானி முனைவர். பால. பத்மநாபன் கூறியது: இந்த புழுக்கள், இலைகளை விரும்பி உண்ணுவதோடு கூட்டுப்புழு பருவத்தில் இலைகளை நன்றாக சுருட்டி அதனுள் கூட்டுப்புழுவாக பாதுகாப்பாக இருந்து, பிறகு அந்துப்பூச்சிகளாக வெளிவருகின்றன. ஆய்வு செய்த வயல்களில் இந்த இலை சுருட்டு புழுக்களின் முட்டைகள், இளம் பருவ நிலைகள், கூண்டுப்புழு மற்றும் தாய் பூச்சிகள் என அனைத்தும் அதிகளவில் காணப்படுகின்றன. இவற்றை கட்டுப்படுத்தாவிட்டால் வாழையில் உள்ள இலைகள் அனைத்தையும் சேதம் செய்துவிடும். இவற்றைக் கட்டுப்படுத்த வாழை மரங்களை நன்கு கண்காணித்து ஒன்றிரண்டு இலைகளில் தாக்கும்போதே, அவற்றை கைவினை முறையின் மூலம் அகற்றி எரித்துவிட வேண்டும். காய்ந்த வாழை இலைகளில், இப்பூச்சிகள் முட்டையிடுவதால் வாழை மரங்களில் தேவையற்ற காய்ந்த வாழை இலைகளை அகற்ற வேண்டும். தாக்குதல் அதிகமாக இருக்கும் காலங்களில் குளோரிபைரிபாஸ் 20 ஈ.சி பூச்சி மருந்தை, ஏக்கருக்கு 500 மி.லி என்ற அளவில் அதிவேக தெளிப்பான் கொண்டு பூச்சி தாக்கிய இலைகளில் தெளித்து இலைகளை தின்னும் புழுக்களை கட்டுப்படுத்த முடியும். மேலும் விவரங்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல்

மையம் மற்றும் தேசிய வாழை ஆராய்ச்சி மையத்தை நேரிலோ அல்லது 04328-293592, 9944244582, 9442359253 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம்.

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

**சீரான விலையில் காய்கறி விற்பனை செய்ய திட்டம்**

ஊட்டி: ஊட்டி மார்க்கெட் கடைகளில், ஒரே சீரான விலையில், காய்கறிகளை விற்கும் வகையில், விலைப் பட்டியல் வைக்கப்பட்டு வருகின்றன. ஊட்டி நகர வியாபாரிகள் சங்கத்தின் சார்பில், ஊட்டி மார்க்கெட்டில் உள்ள காய்கறி கடைகளில், ஒரே சீரான விலையில், பொதுமக்கள், காய்கறிகளை வாங்கிச் செல்லும் வகையில், விலைப் பட்டியல் வைக்கப்பட்டு வருகிறது. "இதன் மூலம், பொதுமக்கள் எவ்வித குழப்பமும் இல்லாமல், தரமான காய்கறிகளை, சரியான விலையில் வாங்கிச் செல்ல முடியும்' என, வியாபாரிகள் சங்க நிர்வாகிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

**ஆவின் பால் ஏஜென்டுகளுக்கு கமிஷன் உயர்வு**

நாகர்கோவில்: குமரி மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் நிர்வாகக்குழு கூட்டம் நாகர்கோவில் ஆவின் பால்பண்ணையில் பால்வள தலைவர் அசோகன் தலைமையில் நடைபெற்றது. துணை தலைவர் வன்னியூர் பாபு, பொது மேலாளர் சுந்தரமகாலிங்கம் , துணை பதிவாளர் கிறிஸ்துதாஸ், இணைய இயக்குனர் குமார், உதவி இயக்குனர் வேலாயுத பெருமாள் உட்பட பலர் கலந்து கொண்டனர். கூட்டத்துக்கு பின்னர் அசோகன் நிருபர்களிடம் கூறியதாவது: கடந்த ஆண்டை ஒப்பிடும் போது பால் கொள்முதல் ஒரு

நாளைக்கு மூவாயிரம் லிட்டர் அதிகரித்துள்ளது. தற்போது 11 ஆயிரத்து 500 லிட்டர் பால் கொள் முதல் செய்யப்படுகிறது. கடந்த டிசம்பர் முடிய ஆவின் 60 லட்சத்து 51 ஆயிரத்து 413 ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. பால் விற்பனையை அதிகரிக்க மொத்த விற்பனையாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். பால் விற்பனையாளர்களுக்கான கமிஷன் 80 பைசாவில் இருந்து ஒரு ரூபாய் 20 பைசாவாக உயர்த்தப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## வேளாண் விருது

விருதுநகர்: விருதுநகர் தாதம்பட்டி கிராமத்தை சேர்ந்த விவசாயி சிவக்குமார். காளான் வளர்ப்பு, சிறுதானிய உணவு பொருட்களை சிறப்பாக விவசாயம் செய்து வருவதை பாராட்டி அவருக்கு சிறந்த தொழில் முனைவோருக்கான வேளாண் விருது வழங்கப்பட்டது. அவரை கலெக்டர் ராஜாராமன் பாராட்டினர்.

# தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## சேலத்தில் ஒரே நாளில் ரூ.2 கோடிக்கு வர்த்தகம் பருத்தி ஏலம் அமோகம்



இடைப்பாடி : சேலம் அருகே கொங்கணாபுரத்தில் நடைபெற்ற ஏலத் தில் ரூ.2 கோடிக்கு பருத்தி விற்பனை செய்யப்பட்டது. சேலம் மாவட்டம் கொங்கணாபுரத்தில் உள்ள திருச்செங்கோடு வேளாண்¬ம் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை களில் பருத்தி ஏலம் நடைபெறு வது வழக்கம். இந்நிலையில், வரத்து அதிகரித்ததால் ஒருநாளைக்கு முன்னதாகவே நேற்றே பருத்தி ஏலம்

துவங்கியது. இதில், திருவண்ணாமலை, கோயம்புத்தூர், ஈரோடு, சேலம், நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட மாவட்டங்களிலிருந்து ஏராளமான விவசாயிகள் சுமார் 1,200 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்தனர். அவற்றை ஏலம் எடுக்க வியாபாரிகளும் குவிந்தனர். இதில், 40 கிலோ எடை கொண்ட டிசிஎச் ரகம் ரூ.4,450 முதல் ரூ.4,830 வரையிலும், பிடி ரகம் ரூ.3,450 முதல் ரூ.4,000க்கும் ஏலம் போனது. இதன்மூலம் நேற்று ஒரேநாளில் ரூ.2 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது. கடந்த 28ம் தேதி சேலம் மாவட்டம் வாழப்பாடியில் நடைபெற்ற ஏலத்தில் 12 ஆயிரம் பருத்தி மூட்டைகள் ரூ.1 கோடியே 95 லட்சத்திற்கு விற்பனையானது. ஆர்சிஎச் ரகம் ரூ.3,321 முதல் ரூ.3,890 வரையிலும், டிசிஎச் ரகம் ரூ.4,191 முதல் ரூ.4,721 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டு ஆர்சிஎச் ரகம் ரூ.7 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரை யிலும் விற்பனை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## <u>மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி</u>

சூலூர், : சூலூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் சார்பில் அருகம்பாளையத்தில் மண்புழு உரம் தயாரிப்பு பயிற்சி முகாம் நடந்தது. வேளாண் உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ தலைமை தாங்கினார். கட்சி சார்பற்ற விவசாயிகள் சங்க மாநில தலைவர் என்.எஸ்.பழனிசாமி, மாநகர் மாவட்ட தலைவர் டாக்டர்.தங்கராஜ், மாவட்ட தலைவர் சண்முகம், மாவட்ட பொருளாளர் சுரேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்த முகாமில் வேளாண் உதவி இயக்குநர் ஜெயஸ்ரீ மண்புழு உரம் தயாரிப்பது குறித்து பேசுகையில், ' தோட்டம், பண்ணைகளில் உள்ள காய்ந்த தென்னை ஓலைகள், மாட்டு சாணம், சோளத்தட்டை உள்ளிட்ட பொருட்களை தொட்டியில் கொட்டி, தகுந்தளவு நீர் ஊற்றி ஊற வைக்க வேண்டும். இதையடுத்து மண்புழுக்களை அந்த தொட்டியில் நீந்த விட வேண்டும். இவ்வாறு 45

முதல் 60 நாட்கள் மண்புழுக்கள் நீந்தும் பட்சத்தில் சிறப்பான மண்புழு உரம் கிடைக்கும்.' என்றார். ராசிபாளையம், அருகம்பாளையம், முத்துக்கவுண்டன்புதூர், கரவழிமாதப்பூர் பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான மரங்களில் புளியங்காய் அறுவடை

கோவை, : தமிழகத்தில் நெடுஞ்சாலை மரங்களில் புளியங்காய் அறுவடை துவங்கியுள்ளது. தமிழகத்தில் 4,974 கி.மீ தூரத்திற்கு தேசிய நெடுஞ்சாலையும், 10,764 கி.மீ தூரத்திற்கு மாநில நெடுஞ்சாலையும், மாவட்ட சாலை 11,247 கி.மீ தூரத்திற்கும், இதர சாலைகள் 35,032 கி.மீ தூரத்திற்கும் அமைந்துள்ளது. மொத்தமாக 62,017 கி.மீ தூரத்திற்கு சாலைகள் இருக்கிறது. இதில் 46 லட்சம் புளிய மரங்களும், 13 லட்சம் இதர வகை மரங்களும் வளர்ந்திருப்பதாக தெரிகிறது. மாநில அளவில், தேசிய, மாநில, மாவட்ட, கிராம சாலைகளில் உள்ள புளிய மரங்களில் புளியங்காய் அறுவடை துவங்கியுள்ளது. ஒப்பந்த முறையில் புளிய மரங்களில் புளியங்காய் பறிக்க ஏலம் விடப்பட்டுள்ளது. மரங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப புளிய மரங்களில் காய் பறிக்க ஏலம் விடப்பட்டு வருகிறது. 50 மரங்களுக்கு 10 ஆயிரம் ரூபாய் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை விலை நிர்ணயித்து நெடுஞ்சாலைத்துறையினர் புளியங்காய் பறிக்க ஏலம் விட்டு வருகின்றனர். வரும் ஏப்ரல் வரை காய் பறிப்பு பணி நடத்தப்படும் வாய்ப்புள்ளது. கோவை வடக்கு, தெற்கு, மேட்டுப்பாளையம், பொள்ளாச்சி, திருப்பூர் நெடுஞ்சாலை கோட்டங்களில் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புளிய மரங்களில் புளியங்காய் உலுக்கி எடுக்கும் பணி நடக்கிறது. கடந்த ஆண்டில், மாநில அளவில் கடந்த ஆண்டு சுமார் 2 ஆயிரம் டன் எடையில் புளி பெறப்பட்டது. சாலை பணிக்காக மரங்கள் அதிகளவு வெட்டப்படுவதால்

நடப்பாண்டில் புளி விளைச்சல் குறைவாக இருக்கும். சுமார் 1500 டன் அளவிற்கு புளியங்காய் கிடைக்க வாய்ப்புள்ளது.

**உளுந்து பயிர்களில் களையெடுக்கும் முறை விவசாயிகளுக்கு விளக்கம்**

சேதுபாவாசத்திரம், : உளுந்து பயிரில் களை நிர்வாகம் மேற்கொள்வது பற்றி விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது. சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி வெளியிட்டுள்ள அறிக்கை: உளுந்து சாகுபடியை பொருத்தவரை களைகளின்றி இருந்தால் தான் நல்ல மகசூல் எடுக்க முடியும். பயிரின் ஆரம்ப காலத்தில் இருந்தே களைகளின்றி இருப்பது அவசி யம். உழவு செய்வதற்கு முன்பே அருகம்புல், கோரை போன்ற களைகள் அதிகமிருந்தால் கிளைசெல் என்கிற களைக்கொல்லி 10 மிலி மருந்தை 1 லிட்டர் தண்ணீருடன் கலந்து அத்துடன் அம்மோனியம் சல்பேட் சேர்த்து கரைத்து தெளிக்க வேண்டும். ஒரு வாரம் கழிந்த பின் உழவு செய்து பின்னர் உளுந்து விதைப்பு பணியை மேற்கொள்ள வேண்டும். விதை விதைத்த 3ம் நாளுக்குள் 1 ஏக்கருக்கு பாசலின் 600 மிலி மருந்து அல்லது ஸ்டாம்ப் என்கிற பென்டிமெத்தலின் களைக்கொல்லி மருந்து 800 மிலி 120 லிட்டர் தண்ணீரில் கலந்து களைக்கொல்லிக்கான நாசிலை பொருத்தி பின்னோக்கி தெளிக்க வேண்டும். இதனால் ஆரம்பகால களைகள் கட்டுப் படுத்தப்படும். பின்னர் 15 நாட்கள் கழித்து ஒரு கை களை எடுத்து களைகளை முற்றிலுமாக கட்டுப்படுத்தலாம். இவை தவிர்த்து பர்சூட் என்ற வியாபார பெயர் கொண்ட இமாஸ்தாபயர் என்ற களைகொல் லியை விதை விதைத்த 16 நாள் முதல் 28 நாள் வரை யிலான காலத்தில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து கைதெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இதனால் அகன்ற இலை கொண்ட அத்தனை வகை களைச்செடிகளும் 100 சதவீதம் அழிக்கப்படுகிறது.

## பயிர்களை சிதைக்கும் எலிகளை?கட்டுப்படுத்த?ஆலோசனை

சிவகங்கை, : நெற் பயிர்களை சேதப்படுத்தும் எலிகளை பாரம்பரிய மற் றும் ரசாயன பொருட்களை கொண்டு கட்டுப்படுத்த வேளாண்துறை ஆலோ சனை வழங்கியுள்ளது. வேளாண்துறை உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் விடுத்துள்ள அறிக்கையில், சிவகங்கை மாவட்டத்தில் தற்போது நெற்பயிர்கள் அறுவடை பரவலாக நடந்து வருகிறது. இந்த நிலையில் எலிகள் பயிர்களை சேதப்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளது. எலிகளால் 2 சதவீதம் முதல் 15 சதவீதம் வரை பயிர்கள் சேதமடையும். 5 முதல் 6 சதவீதம் வரையிலான உணவு தானியங்கள் அழியும். எனவே இவற்றை தடுக்க விவசாயிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். பாரம்பரிய முறையில் எலிகளை கட்டுப்படுத்த வயல்களில் ஆட்டுக்கிடை அமைப்பது, நொச்சி, எருக்கலை செடிகளை வயல் வரப்புகளை சுற்றி வேலிப்பயிராக நடுவது உள்ளிட்டவற்றை செய்யலாம். சணப்பு பூவை சிறு, சிறு துண்டுகளாக வெட்டி அவற்றை வயல் முழுவதும் தூவினால் அதிலிருந்து வாடையில் எலிகள் வராது. எலி வலைக்கு அருகில் ஆந்தை உட்கார குச்சி வைப்பதன் மூலம் எலிகளை கட்டுப்படுத்தலாம். மூங்கில் கழிகளை கொண்டு எலிப்பொறி செய்து எலிகளை பிடிக்கலாம். பயிர் அறுவடைக்குப்பிள் எலி வலை தோண்டி எலிகளை அழிக்க வேண்டும். பசும் சாணத்தை வயலிலும், வரப்பிலும் வைக்கலாம். ஊரவைத்த அரிசியை எலி கவரும் பொறியாக வைத்தால் அதிக எலிகளை கவர்ந்து பின்னர் அழிக்கலாம். ரசாயன முறையில் எலிகளை அழிக்க 2 கிராம் துத்தநாக பாஸ்பைடு மருந்தை 98கிராம் உணவு பொறியுடன் கலந்து வைத்து எலிகளை கொன்று அழிக்கலாம். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தஞ்சை மாவட்டத்தில், இதுவரை 1,950 எக்டேரில் கோடை நெல் சாகுபடி கலெக்டர் சுப்பையன் தகவல்</u>

தஞ்சாவூர், தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நேற்றுகாலை நடந்தது. கூட்டத்திற்கு கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கி பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

தஞ்சை மாவட்டத்தில் 2014–15–ம் ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு 1 லட்சத்து 38 ஆயிரத்து 660 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு 1 லட்சத்து 35 ஆயிரத்து 689 எக்டேர் நிலப்பரப்பில் நெல்சாகுபடி நடைபெற்றுள்ளது. சம்பா நெற்பயிர் இதுவரை 45 ஆயிரத்து 510 எக்டேரில் அறுவடை செய்யப்பட்டுள்ளது. சராசரியான மகசூலாக ஒரு எக்டேருக்கு 5 ஆயிரத்து 980 கிலோ நெல் பெறப்பட்டுள்ளது. கோடை பருவத்திற்கான நாற்றங்கால் 200 எக்டேரில் அமைக்கப்பட்டு, 1,950 எக்டேரில் நடவு செய்யப்பட்டுள்ளது. கோடை பருவத்திற்கான நெல் ரகங்களான ஆடுதுறை–43, ஆடுதுறை–45 மற்றும் ஆடுதுறை–36 ஆகியவை அனைத்து வேளாண்மை விரிவாக்க மையங்களிலும் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தஞ்சை மாவட்டத்தின் தேவைக்காக யூரியா 1,140 மெட்ரிக் டன்னும், டி.ஏ.பி. 2,583 மெட்ரிக் டன்னும், பொட்டாஷ் 1,519 மெட்ரிக் டன்னும், காம்ப்ளக்ஸ் உரங்கள் 1,312 மெட்ரிக் டன்னும் அனைத்து தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் மற்றும் தனியார் விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர் கூறினார்.